1978 மார்ச் 10]

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்களுடைய யோசனையைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

Dispensary to Konapet Village.

* Q. 505—THIRU N. SUNDARARAJ: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to open a Government dispensary at Konapet village in Tirumayam taluk in Pudukkottai district; and

(b) if so, when it will be implemented?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: (அ) ஆம்.

(ஆ) 1978-79 ஆம் ஆண்டின் இரண்டாம் பகுதி திட்டமாக இச்செயற்குறிப்பைச் செயல்படுத்துவது, அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, அந்த அரசு மருந்தகத்தைக் கட்டுவதற்கு, ஆரம்பிப்பதற்கு அங்கே இருக்கக்கூடிய பொதுமக்கள் 50,000 ரூபாய் அரசாங்கத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள். அப்படி ஒப்படைக்கப்பட்டு சுமார் ஐந்து ஆண்டுகள் ஆகியும் இதுவரை எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கிற காரணத்தினால், உடனடியாக இந்த ஆண்டாவது அதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: நான் ஏற்கனவே என்னுடைய பதிலில் தெரிவித்திருக்கிறேன். 1978-79 ஆம் ஆண்டு இரண்டாம் பகுதித் திட்டமாக இச்செயற்குறிப்பு செயல்பட அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்களுடைய கேள்விக்கு நிதி அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களாகப் பதில் அளித்து வருகிறார். இது தற்காலிக ஏற்பாடா? அல்லது நிரந்தர ஏற்பாடா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: அவருக்காக நான் பதில் சொல்லக் கூடாது என்று விதியில்லை. இம்மாதிரி யாருக்கும், யாரும் பதில் சொல்லலாம். இது நிரந்தர ஏற்பாடா, தற்காலிக ஏற்பாடா என்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டதற்குப் பதில் தாற்காலிக ஏற்பாடு.

வளையங்குளம் வட்டாரத்திற்குப் பாசன வசதி

*வினா 484.—**திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தொகுதி, வளையங்குளம் வட்டாரத்தைச் சார்ந்த 30 கிராமங்களுக்குப் பாசன வசதிக்கென நிலையூர் வாய்க்கால் சிந்தாமணி பேரணை இவைகளிலிருந்து ஒருகால் கொண்டுவர இந்த அரசாங்கம் உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) இதற்கான முதல்நிலை ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இத் திட்டம் இந்த ஆண்டு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள இயலும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

தொழில்நுட்ப உதவியாளர் சம்பளம்.

*வினா 485. **திரு. ஈஸ்வரமூர்த்தி பி. என்கிற சொரணம்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு முடித்து சிவில் இன்ஜினியரிங் சப்ஜெக்ட் படித்தவர்கள் தொழிநுட்ப உதவியாளர்கள் என்ற பெயரில், பணி ஆய்வாளர்களை விட உயர்ந்த பொறுப்பில் உள்ளவர்களுக்குப் பணி ஆய்வாளர் சம்பளம் வழங்கப்படும் தவறான போக்கு அரசின் கவனத்திற்கு வந்ததா?